வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் அம்சா மற்றும் சிலர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்குகள் தொடர்பாக, காவல் துறையினர் இதுவரை 10 நபர்களைக் கைது செய்துள்ளனர். குற்றம் சாட்டப்பட்ட மற்றவர்களை காவல் துறையினர் தேடி வருகிறார்கள்.

பொது அமைதிக்குப் பங்கம் விளைவித்து, வன்முறையில் ஈடுபட்டவர்களைத் தடுத்து நிறுத்துவதற்காக, இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் காவல் துறையினருக்கு எழுந்துள்ளது என்பதை இந்தப் பேரவைக்கு தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

(ஆ) அரியலூர் வட்டத்திலும், ஆண்டிமடத்திலும் மூளைக்காய்ச்சல் நோய் இருப்பதாகக் கூறப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த பிரச்சினை. திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரியலூர் வட்டத்திலும், குறிப்பாக ஆண்டிமடத்திலும் மூளைக் காய்ச்சல் நோய் பெரும் அளவில் இருப்பதாகத் தெரிவித்து திரு. ஆர். தங்கராஜ், டாக்டர் சு. மணிமேகலை ஆகியோர் ஒரு அறிவிப்பைக் கொடுத்துள்ளனர். இதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர அனுமதிக்கிறேன். திரு. ஆர். தங்கராஜ்.

திரு. சி. ஞானசேகரன்: தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நான் நிராகரித்து இருக்கிறேன். நீங்கள் என்னுடைய அறையிலே வந்து உட்கார்ந்து கொண்டு யாராவது ஒரு உறுப்பினர் கொடுக்கின்றபோது என்னுடைய பெயரையும் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று எழுதிவிட்டு வருவதை ஏற்றுக் கொள்ள முடியாது. அந்த அறிவிப்பு நிராகரிக்கப்பட்டிருக்கிறது. திரு. ஆர். தங்கராஜ்.

திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல வருடங்களாகவே பருவ மழை பெய்கின்ற ஒவ்வொரு ஆண்டும் அரியலூர் தாலுக்கா, பெரம்பலூர் தாலுக்கா, ஜெயங்கொண்டம் தாலுக்கா ஆகிய 3 தாலுக்காக்களிலும் இதைப் போன்ற ஒரு கடுமையான ஜுரம் ஏற்படுகிறது அங்கே அந்த ஜுரம் ஏற்படுகிற போது அந்தப் பிள்ளைகளுக்கு எல்லாம் வலிப்பு நோய்

1994 நவம்பர் 10] [திரு. ஆர். தங்கராஜ்]

மாதிரி வந்து கை, கால் இழுக்கப்பட்டு அவர்கள் இறந்து விடுகின்றனர். அதனால் பருவ மழைக்கு முன்பாகவே நாம் அதற்கு தடுப்பு முறையாக பல்வேறு மருந்துகளைத் தெளித்திருந்தால் அந்த நோய் ஏற்படாமல் இருந்திருக்கும். அப்படியெல்லாம் செய்யாததன் காரணமாக இன்று அந்தப் பகுதியில் 4 குழந்தைகள் இறந்து இருப்பதுடன் பல்வேறு குழந்தைகளுக்கு இதைப் போன்ற கடுமையான ஜுரம் ஏற்பட்டு அங்கே இருக்கின்ற மக்களிடையே மிகவும் பரபரப்பான ஒரு சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இது கடந்த பல ஆண்டுகளாகவே இருந்து கொண்டுதான் இருக்கிறது. இப்படி இருந்தும்கூட அங்கே அந்த நோயைத் தடுப்பதற்கு சரியான நடவடிக்கை எடுக்காமல் இருப்பதும் அதற்கு ஒரு காரணமாக இருக்கும். அத்துடன் அந்தப் பகுதியில் இருக்கும் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் எல்லாம சரிவரப் பராமரிக்கப்படாமல் இருப்பதுடன் அந்தத் தொட்டிகளைக் கழுவுவதே இல்லை. அத்துடன் அங்கே இருக்கின்ற, பல்வேறு கிராமங்களிலே இருக்கின்ற சாக்கடைத் தண்ணீர் எல்லாம் சாலையின் மேலே சென்று கொண்டு இருப்பதால்தான் இந்த நோய் ஏற்படுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கிறது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு சிறப்பு ......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு என்றால் இந்த மாதிரி நிலை இருக்கிறது, இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்று தான் கேட்க வேண்டும்.

முற்பகல் 11-25

திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பு வல்லுநர்களைக் கொண்டு போர்க்கால அடிப்படையில் அந்த மூளைக் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ? அப்படி நடவடிக்கை எடுத்து அங்கு மூளைக் காய்ச்சல் ஏற்படாமல் அந்தப் பகுதியை எப்போதும் ஒரு சிறப்புப் பகுதியாக அறிவித்து அங்கு முன்னேற்பாடாக இதுபோன்ற பல்வேறு திட்டங்கள் போட்டு மீண்டும் அந்தப் பகுதியில் மூளைக் காய்ச்சல் ஏற்பாடமல் இருப்பதற்கு, தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா என்பதை இந்த அவையின் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் சு. மணிமேகலை.

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் அரியலூர், பெரம்பலூர்,

[டாக்டர் சு. மணிமேகலை] [1994 நவம்பர் 10

செந்துரை, வரகூர், வேப்பூர் ஆகிய பகுதிகளில் ஒவ்வொரு ஆண்டும் மூளைக் காய்ச்சலால் குழந்தைகள் இறப்பது உண்டு. இதை உணர்ந்த நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், எந்த அரசும் இதுவரை எடுத்திராத தடுப்பு நடவடிக்கைகளை இந்த ஆண்டு மேற்கொண்டிருக்கிறார்கள். பயிரின் அருமை பயிர் செய்தவனுக்குத் தான் தெரியும்; பிள்ளையின் அருமை பெற்ற தாய்க்குத் தான் தெரியும். ஆகவே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த வருடம் எடுத்த நடவடிக்கையின் காரணமாக மூளைக் காய்ச்சல், என்னுடைய பகுதியில், அதாவது அரியலூர் பகுதியில் மிகவும் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. 9–10–94 அன்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், மாவட்ட ஆட்சித் தலைவரையும், மற்ற அதிகாரிகளையும் அழைத்துப் பேசி இந்த ஆண்டு மூளைக் காய்ச்சல் வர விடாமல் கட்டாயமாக நீங்கள் சுறுசுறுப்பாக இயங்கவேண்டும், தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று அறிவுறுத்தியதின் அடிப்படையில் 10–10–94 அன்றிலிருந்தே வெகுவாக மருந்துத் தெளிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கு ஒரு ஆக்ஷன் பிளான் போட்டு, அந்த ஆக்ஷன் பிளானின்படி மருந்துத் தெளிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அதே ஊரில் அவருடைய தொகுதியில் மருந்துத் தெளிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை நான் புள்ளிவிவரத்தோடு இங்கே வைத்துள்ளேன். அந்தத் தொகுதியில் பாதிக்கப்பட்ட ஒரு கேஸை நானே அவருடைய ஊருக்குச் சென்று பார்த்தேன். அந்தப் பகுதியிலுள்ள எல்லா மக்களையும் விசாரித்த போது அங்கு வீடு வீடாக வந்து மருந்துத் தெளிப்பு நடத்தினார்கள் என்று என்னிடம் சொன்னார்கள். அடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 22–10–94 அன்று சென்னையிலிருந்து ஒரு டீமை அனுப்பி லீகோ தர்மல் ஏரோசால் ஃபேக் இயந்திரம் மூலம் அதாவது இராட்சத புகைப்போக்கியின் மூலம் கொசுக்களை ஒழிக்க ஏற்பாடு செய்தார்கள். அந்த டீம் அங்கு சென்று மருந்து தெளிக்க ஆவன செய்திருக்கிறது.

அடுத்து, அங்கு பன்றிகளை ஒழிக்கவேண்டுமென்று திட்டம் தீட்டி, பன்றிகளை வளர்ப்பவர்கள் அதைத் தொழிலாகக் கொண்டு இருப்பதால் உடனடியாக நாம் நினைத்த நேரத்தில் பன்றிகளை ஒழித்து விட முடியாது. ஆகவே, சுவரொட்டிகள் மூலம், டாம், டாம் மூலம், நோட்டீஸ் ஒட்டியும், பன்றிகளை நீங்கள் அகற்ற வேண்டுமென்று அறிவுறுத்தி அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்து, ஏன் என்றால்

1994 நவம்பர் 10] [டாக்டர் சு. மணிமேகலை]

அதை அவர்கள் தொழிலாகச் செய்து அதை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக நாம் நினைத்த நேரத்தில் பன்றிகளைக் கொன்று விட முடியாது. ஆகவே, அவர்களுக்கு ஒரு கால அவகாசம் கொடுத்து *(மணியடிக்கப்பெற்றது)* அந்தப் பன்றிகளை நீங்கள் அப்புறப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். அதன்படி அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஒரு மனு கொடுத்தார்கள். அதாவது எங்களுக்கு தீபாவளி வரை டைம் கொடுங்கள், அதற்குள் நாங்களே அகற்றிவிடுகிறோம் என்று சொன்னார்கள். ஆகவே, 3–11–94 வரை அவர்களுக்கு அவகாசம் கொடுக்கப்பட்டது. 3–11–94 வரை அவகாசம் கொடுத்து 4 ஆம் தேதி உடனடியாக, அகற்றப்படாத பன்றிகளைத் துரித நடவடிக்கை எடுத்து சுட்டுக் கொன்றார்கள். இதற்கு முன்பு அந்தப் பன்றிகளை வளர்ப்பவர்களுக்கு ஒரு அறிவுரை சொன்னார்கள். வேண்டுகோள் விடுத்தார்கள். நீங்கள் பன்றிகளை வளர்க்காவிட்டாலும் வேறு ஏதாவது தொழில் செய்ய விரும்பினால் அதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மாற்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் பன்றிகளை அப்புறப்படுத்த வேண்டுமென்று சொல்லி அறிவுறுத்தி, வேண்டுகோள் விடுத்து அதற்குப் பின்பு பன்றிகள் அகற்றப்பட்டிருக்கின்றன. நான் ஒரு புள்ளிவிவரத்தை இந்த அவைக்கு கட்டாயமாகத் தெரிவிக்கவேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதெல்லாம் தேவையில்லை. நீங்கள் முழுமையான புள்ளிவிவரத்திற்குள் போக முடியாது. உங்களுடைய விளக்கத்தைச் சொல்லி அமைச்சரிடமிருந்து நீங்கள் விளக்கம் கேட்கவேண்டும். அரசிடமிருந்து விளக்கம் கேளுங்கள். அமைச்சர்தான் புள்ளிவிவரத்தைத் தருவார்கள்.

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு பாதிப்பு குறைந்திருக்கிறது. அதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சீரியஸாக எடுத்திருக்கிறார்கள். அந்தப் புள்ளிவிவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள். இந்த நடவடிக்கை தொடர்ந்து இப்போது நடந்து கொண்டிருக்கிறது. மீண்டும் இந்த நடவடிக்கை தொடரவேண்டும் என்ற ஒரு வேண்டுகோளை விடுத்து, கட்டாயமாக, முழுமையாக அடுத்த ஆண்டு இதை ஒழித்துவிட வேண்டும் என்ற ஒரு விண்ணப்பதை வைத்து அமர்கிறேன்.

[1994 நவம்பர் 10

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு உறுப்பினர் இங்கே கேள்வி கேட்டார். இன்னொரு உறுப்பினர் அதற்குப் பதில் சொல்லிவிட்டார். அதனால் எனக்கு அநேகமாக வேலை குறைந்து இருக்கிறது என்று கருதுகிறேன். இந்த அரசாங்கம் என்னென்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கமாகச் சொல்லி விட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் இப்படி நடக்கிறது என்பதைத் தெரிந்து, இதற்காகத் தனியாக பணமும் ஒதுக்கி, உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். அந்த அடிப்படையிலே மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய மாநாட்டிலே கூட இது பேசப்பட்டு, உரிய நடவடிக்கை அந்தந்தப் பகுதிகளிலே மேற்கொள்ளப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டது. அதற்குப் பின்னாலே, நான் திருச்சியிலே மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அதிகாரிகளோடு பேசி என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்ற ஒரு திட்டம் வகுத்து அந்த நடவடிக்கையை இப்போது செய்து கொண்டு இருக்கிறோம். ஏறத்தாழ 150 ஸ்பிரேயர்கள் மூலம் அங்கே இப்போது மருந்து தெளித்துக் கொண்டு இருக்கிறார்கள். அதேபோல, மொத்தமாக, பெரிய அளவிலே மருந்து தெளிக்கப்பட வேண்டும் என்பதற்காக அந்த மருந்தைத் தெளிக்கும் ஒரு பெரிய இயந்திரம் சென்னை கார்ப்பரேஷனிலேயிருந்து எடுத்துச் செல்லப்பட்டு அங்கே அந்தக் காரியம் செய்யப்பட்டது. இப்படி பல்வேறு நடவடிக்கைகளை இப்போது நாங்கள் எடுத்து இருக்கிறோம். கடந்த ஆண்டுகளுடைய கணக்குகளை நீங்கள் எடுத்துப் பார்த்தால், 1987, 1988, 1989 இப்படி வரிசையாக எடுத்துப் பார்த்தால் ஏறத்தாழ, 47, 37, 25, 25, 84, 64, 82 என்று இப்படி குழந்தைகள் அங்கே இறந்து இருக்கிறார்கள். இந்தக் கணக்கின் அடிப்படையிலே குழந்தைகள் இறந்து இருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு மிகவும் குறைந்து இருக்கிறது. அநேகமாக அக்டோபர் மாதத்திலேதான் இந்த நோய் அதிகமாகப் பரவி, குழந்தைகள் இறக்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. இந்த ஆண்டு எண்ணிக்கை மிக மிகக் குறைந்து இருக்கிறது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் காரணமாக இது குறைக்கப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் இந்த மூன்று, நான்கு மாத காலம் மட்டுமே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனால், இப்போது

1994 நவம்பர் 10] [திரு. சு. முத்துசாமி]

அரசு அதைத் தொடர் நடவடிக்கையாக எடுத்து சுத்தமாக அந்தப் பகுதியிலே அந்த நோய் வராமல் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. அதேபோல, பன்றிகளை அங்கேயிருந்து அகற்ற வேண்டும்; அப்படி அகற்றவில்லை என்றால் அவைகள் சுடப்படும் என்று அவர்களுக்கு ஒரு கால அவகாசம் கொடுக்கப்பட்டது. அவர்கள் அந்தத் தொழிலைச் செய்கின்ற காரணத்தால் அவர்களுக்கு மற்ற தொழில் செய்வதற்கான ஏற்பாடும்கூட செய்து கொடுப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லி அரசினுடைய சார்பாகவும் அறிவிக்கப்பட்டது. அதிலே பெரும்பகுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. எனவே, இந்த நடவடிக்கைகளின் மூலமாக அது முழுமையாக அங்கே கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது. அதேபோல, மருத்துவர்கள், மருந்துகள், தேவையான அத்தனையும் அங்கே ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றன. எனவே, கடந்த ஆண்டுகளைவிட இந்த ஆண்டு மிக மிக, மிகக் குறைந்து இருக்கிறது என்பதையும், அடுத்த ஆண்டிலேயிருந்து நிச்சயமாக, முழுமையாக இல்லாத சூழ்நிலையை ஏற்படுத்திவிட முடியும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எந்தெந்தப் பகுதிகளிலே என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்ற பட்டியலை வரிசையாகச் சொன்னால் அதற்குக் காலம் போதாது என்ற காரணத்தால், இந்த விளக்கமே போதும் என்று நான் கருதுகிறேன். எனவே, கடந்த காலங்களிலே இருந்ததைவிட மிக அதிக அளவிலே அங்கே நடவடிக்கை எடுக்கப்பட்டு அவைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்கள் பயிற்சியைத் தொடர முடியாததும், தேர்வு எழுத முடியாததும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்கள் பயிற்சியைத் தொடர முடியாமலும், தேர்வு எழுத முடியாமலும் உள்ள நிலை குறித்து, திரு. ஞானசேகரன் ஒரு அறிவிப்பைக் கொடுத்து இருக்கிறார். இது ஏற்கெனவே பலமுறை அவையில் பேசப்பட்ட பிரச்சினைதான். இருந்தாலும், இதில் புதிய பிரச்சினை ஏதாவது இருந்தால் அதை மட்டும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து அமரலாம்.